**ITI**
**2020**

सत्यमेव जयते

Industrial Training Institute

Skill India
कौशल भारत - कुशल भारत



# அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை - 2020

# விளக்க கையேடு

## புதுச்சேரி அரசு
## தொழிலாளர் துறை



# பொருளடக்கம்


| வ. எண் | விளக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பயிற்சியின் நோக்கம் (Training Objectives) | 2 |
| 2 | பொதுவான தகவல்கள் (General Information) | 2 |
| 3 | பயிற்சி (Training) | 2 |
| 4 | கல்வித்தகுதி (Educational Qualification) | 3 |
| 5 | வயது வரம்பு (Age Limit) | 4 |
| 6 | உடல் தகுதி (Physical Fitness) | 4 |
| 7 | இட ஒதுக்கீடு (Reservation) | 4 |
| 8 | கிடைநிலை ஒதுக்கீடு (Horizontal Reservation) | 5 |
| 9 | குடியிருப்புச் சான்றிதழ் (Residence Certificate) | 6 |
| 10 | விண்ணப்பிக்கும் முறை (How to Apply) | 6 |
| 11 | பயிற்சி பெறுபவரைத் தேர்ந்தெடுக்கும் முறை (Trainees Selection Procedure) | 7 |
| 12 | தரவரிசையில் சமநிலை மதிப்பெண் (Equal Score in the Ranking) | 8 |
| 13 | அசல் சான்றிதழ் சமர்பிப்பு (Submission of Original Certificates) | 8 |
| 14 | சான்றிதழ் சரிபார்ப்பு (Certificate Verification) | 9 |
| 15 | பயிற்சிக் கட்டணம் (Tuition Fee) | 9 |
| 16 | உதவித் தொகை (Stipend) | 10 |
| 17 | ஊக்கத் தொகை (Merit Scholarship) | 10 |
| 18 | வேலைவாய்ப்புகள் (Job Opportunities) | 10 |
| 19 | புதுச்சேரி அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள பயிற்சி பிரிவுகள், பயிற்சி காலம், கல்வித்தகுதி ஆகியவற்றின் விவரங்கள் (Trade details, Training Period and Educational Qualification): | 11 |
| 20 | அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அங்குள்ள பயிற்சி பிரிவுகளின் விவரங்கள் (ITI and Trade Details) | 13 |
| 21 | அலுவலக முகவரி மற்றும் அலைபேசி விவரம் (Contact Details) | 15 |

# அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை - 2020

# விளக்க கையேடு

## 1. பயிற்சியின் நோக்கம் (Training Objectives):

புதுச்சேரியில் உள்ள இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் தொழிற்பயிற்சி அளித்து, அவர்களது திறனை மேம்படுத்தி, வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தருவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## 2. பொதுவான தகவல்கள் (General Information):

புதுச்சேரியில் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை கலந்தாய்வு முறையில் மேற்கொள்ளப்பட உள்ளதையடுத்து, விண்ணப்பங்கள் ஆன்லைன் (Online) முலம் வரவேற்கப்படுகின்றன. தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர விரும்பும் விண்ணப்பதாரர்கள் இவ்விளக்க கையேட்டில் தரப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தையும் கவனமுடன் படித்து தெரிந்து கொள்ளவும்.

- தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிற்சி பெற்றிட விருப்பம் உள்ளோர் விண்ணப்பத்தினை இணையதளம் வாயிலாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பதாரரின் மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் (Merit List) தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப ஒதுக்கப்பட்ட தேதிகளில் அரசு விதிகளுக்குட்பட்டு கலந்தாய்வு (Counselling) வாயிலாக சேர்க்கை நடைபெறும்.

## 3. பயிற்சி (Training):

- தொழிற்பயிற்சி நிலையங்களில் மத்திய அரசின் தேசிய தொழிற்பயிற்சிக் குழுமத்தின் (NCVT) அங்கீகாரத்தின் கீழ் பல்வேறு தொழிற்பிரிவுகளில் ஓராண்டு மற்றும் ஈராண்டு கால அளவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
- அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் விவரம் மற்றும் அங்கு பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகளின் விவரம் ஆகியவை பகுதி-19-ல் விளக்கப்பட்டுள்ளது.
- பயிற்சிக்கால அளவு, சேர்க்கைக்கான கல்வித்தகுதி ஆகிய விவரங்கள் கல்வித்தகுதி பகுதி-4-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தொழிற்பயிற்சி நிலையங்களில் 2020-ஆம் ஆண்டுக்கான பயிற்சி செப்டம்பர் மாதம் துவங்கும்.
- பயிற்சியின் போது ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் அகில இந்திய தொழிற் தேர்வு நடத்தப்பட்டு அனைத்து ஆண்டு தேர்வுகளிலும் தேர்ச்சி

பெறுபவர்களுக்கு தேசிய தொழிற் சான்றிதழ் (NTC) வழங்கப்படும்.

- சில அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாநில தொழிற்பயிற்சிக்குழுமத்தின் (SCVT) கீழ் செயல்படும் தொழிற்பிரிவுகளில் வழங்கப்படும் பயிற்சிக்கு மாநில தொழிற்பயிற்சிக்குழுமத்தின் சான்றிதழ் வழங்கப்படும். மத்திய அரசு சான்றிதழ் (NCVT) தேவைப்படின் SCVT முறையில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தன்விருப்ப அடிப்படையில் தனியாராக (Private Candidates) NCVT அகில இந்திய தொழிற்தேர்வு எழுதி தேர்ச்சி பெறவேண்டும்.

## 4. கல்வித்தகுதி (Educational Qualification):

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகளுக்கான குறைந்தபட்ச கல்வித்தகுதியாக எட்டாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

- **எட்டாம் வகுப்பு தேர்ச்சி** - தொழிற் பயிற்சி நிலையங்களில் பின்வரும் தொழிற்பிரிவுகளுக்கு மட்டும் குறைந்தபட்சம் எட்டாம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்குமேல் கல்வித் தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
    - ✓ கட்டிடம் கட்டுபவர் - Mason (Building Construction)
    - ✓ தையல் தொழில்நுட்பம் - Sewing Technology
    - ✓ வெல்டர் - Welder
    - ✓ ஒயர்மேன் - Wireman



- **பத்தாம் வகுப்பு தேர்ச்சி** – மற்ற அனைத்து பயிற்சி பிரிவுகளுக்கும் பத்தாம் வகுப்பு தேரச்சி அல்லது அதற்குமேல் கல்வித் தகுதி உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். பத்தாம் வகுப்பு தனித்தேர்வராக எழுதி தேர்ச்சி பெற்றிருப்பினும் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படுவர்.

- பத்தாம் வகுப்பு மறுதேர்வு (Supplementary Exam) எழுதி முடிவுக்காக காத்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால், மறுதேர்வு முடிவு அறிவிக்கப்பட்ட ஒரு வாரத்திற்குள் மதிப்பெண் சான்றிதழின் நகலை சேர விரும்பும் தொழிற்பயிற்சி நிலையத்தில் நேரில் சமர்ப்பிக்கவேண்டும். அவ்வமயம் காலியாக உள்ள இடங்களுக்கு மட்டும் மதிப்பெண் சான்றிதழ் அளித்தவர்களில் மதிப்பெண் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவ்வாறு தேர்ச்சி சான்றிதழ் சமர்ப்பிக்கத் தவறியவர்கள் சேர விருப்பம் இல்லாதவர்களாக கருதப்பட்டு தகுதி இழப்பு செய்யப்படுவர்.

## 5. வயது வரம்பு (Age Limit):

- இவ்வருட ஆகஸ்ட் மாதம் முதல் நாள் 14 வயது நிரம்பியவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- மோட்டார் வாகன மெகானிக் (Mechanic (Motor Vehicle)) – பிரிவில் பயில விரும்புவோர் ஆகஸ்ட் மாதம் முதல் நாள் 17 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும்.
- அதிகபட்ச வயது வரம்பு இல்லை.

## 6. உடல் தகுதி (Physical Fitness):

- விண்ணப்பதாரர் தொற்றுநோய்/அதற்கான அறிகுறிகள் இல்லாதவராக இருத்தல் வேண்டும். மிகுதிபடக்கூடிய அல்லது பயிற்சி பெறுவதற்குத் தகுதியற்ற வியாதிகளினாலும் பொது சுகாதாரத்திற்குத் தகுதியற்ற வியாதிகளினாலும் பீடிக்கப்பட்டுள்ளவராக இருக்கக்கூடாது. மருத்துவ சான்றிதழின்படி உடல் தகுதியற்றோர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
- மாற்றுத் திறனாளிகள் உடற்குறைபாட்டின் தன்மையைப் பொறுத்து மருத்துவரின் பரிந்துரையின் பேரில் உரிய தொழிற் பிரிவுகளில் சேர்க்கைக்கு பரிசீலிக்கப்படுவர். மருத்துவர் முன்பு ஆஜராகி, மருத்துவர் அளிக்கும் சான்றிதழின்படி மட்டுமே இவர்களுக்கு தொழிற்பயிற்சி நிலையத்தில் தொழிற்பிரிவுகள் ஒதுக்கப்படும்.
- மாற்றுத் திறனாளிகள் தங்களின் உடற்குறைபாட்டின் தன்மையை விளக்கும் வகையில் 125 x 75 மி.மீ. நிழற்படத்தையும், முடவியல் (Ortho) மருத்துவரின் சான்றிதழையும் பெற்று பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.

## 7. இட ஒதுக்கீடு (Reservation):

| வ.எண் | இட ஒதுக்கீட்டு பிரிவு | இட ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | பூர்வீக அட்டவணை இனத்தவர் (SC – Origin) | 16% |
| 2(அ) | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC) | 18% |
| 2(ஆ) | உச்ச பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (EBC) | 2% |
| 2(இ) | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) | 11% |
| 2(ஈ) | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முகமதியர் (BCM) | 2% |
| 2(உ) | பிற்படுத்தப்பட்ட பழங்குடியினர் (BT) | 1% |
| 3 | பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு (EWS) (புதுச்சேரி அரசு ஒப்புதலுக்கு உட்பட்டது) | 10% |

மேற்படி ஒதுக்கீடுகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட அலுவலர்களிடமிருந்து சான்றிதழ் பெற்று பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்:-

- சாதி சான்றிதழ் (Community Certificate) துணை வட்டாட்சியருக்கு குறையாத தகுதி உடைய அதிகாரியிடமிருந்து 01.01.2020 பிறகு பெற்று பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.
- நிரந்தர ஒருங்கிணைந்த சான்றிதழ் (PIC – Permanent Integrated Certificate) துணை வட்டாட்சியருக்கு குறையாத தகுதி உடைய அதிகாரியிடமிருந்து நடப்பு ஆண்டிற்கு புதுப்பித்து பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.

## 8. கிடைநிலை ஒதுக்கீடு (Horizontal Reservation):

| வ.எண் | கிடைநிலை ஒதுகீட்டு பிரிவு | கிடைநிலை ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | புதுச்சேரி யூனியன் பிரதேச விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள்/பேரக் குழங்க்தைகள் (FF) | 4% |
| 2 | முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகள் (Ex-Service Man/Woman) | 3% |
| 3 | மாற்றுத் திறனாளிகள் (PC) (புதுச்சேரி அரசு ஒப்புதலுக்கு உட்பட்டது) | 4% |
| 4 | விளையாட்டு வீரர்கள் (MSP) | 1% |

மேற்படி ஒதுக்கீடுகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட அலுவலர்களிடமிருந்து 01.01.2020 –க்கு பிறகு சான்றிதழ்கள் பெற்று பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்:-

- **விடுதலைப் போராட்ட வீரர் இட ஒதுகீட்டு:** நல அலுவலர், விடுதலைப் போராட்ட வீரர்கள் அலுவலகம் தலைமைச் செயலகம், புதுச்சேரி.
- **முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகள் இட ஒதுகீட்டு:** செயலர், ராஜ்ய சயனிக் போர்டு, புதுச்சேரி.
- **விளையாட்டு வீரர்கள் இட ஒதுகீட்டு:** தேசிய / மாநில / பிராந்திய அளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்றதற்கான புதுச்சேரி மாநில முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் அவர்களிடம் இருந்து சான்றிதழ் பெற்று இருத்தல் வேண்டும்.

## 9. குடியிருப்புச் சான்றிதழ் (Residence Certificate):

குடியிருப்புச் சான்றிதழ் அரசின் கீழ்க்கண்ட உத்தரவுப்படி இருத்தல் வேண்டும்.

- விண்ணப்பிக்கும் மாணவர்/ மாணவியர் புதுச்சேரி அரசின் அங்கீகாரம் பெற்ற ஒரே பள்ளியில் இறுதி ஐந்து ஆண்டுகள் அல்லது புதுச்சேரி அரசின் அங்கீகாரம் பெற்ற வெவ்வேறு பள்ளிகளில் தொடர்ந்து இறுதி ஐந்து ஆண்டுகள் பயின்றவரானால் குடியிருப்புச் சான்றிதழுக்கு (Residence Certificate) பதில் பள்ளியில் அளித்த மாற்றல் சான்றிதழை பதிவேற்றம் (Upload) செய்தால் போதுமானது.
- மேற்கண்டவாறு புதுச்சேரி அரசின் அங்கீகாரம் பெற்ற பள்ளியில் அல்லது பள்ளிகளில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பயிலாத மாணவர்கள் தமது பெற்றோர் ஐந்து ஆண்டுகள் புதுவை யூனியன் பிரதேசத்தில் குடியிருந்ததற்கான குடியிருப்புச் சான்றிதழை 01.01.2020 –க்கு பிறகு பெற்று பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும்.

## 10. விண்ணப்பிக்கும் முறை (How to Apply):

- அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையத்தில் சேர்க்கைக்கு விண்ணப்பிக்க https://www.centacpuducherry.in/ அல்லது https://labour.py.gov.in/ என்ற இணையதள முகவரியின் மூலம் ஆன்லைனில் (Online) விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையதளத்தில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து உரிய சான்றிதழ்களை பதிவேற்றம் (Upload) செய்து சரிபார்த்த பின் சமர்ப்பித்து ஒப்புகை பெறலாம்.
- மாணவர்கள் விண்ணப்பிக்கும்போது தங்களது சரியான அலைபேசி எண் (Mobile Number) மற்றும் மின்னஞ்சல் முகவரியினை (e-Mail) குறிப்பிட வேண்டும். கலந்தாய்வு நடைபெறும் விவரங்கள் அனைத்தும் குறுந்தகவல்களாக (SMS) மட்டுமே அனுப்பப்படும் என்பதால் இதில் தனிக்கவனம் செலுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது.
- புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதிகளில் உள்ள ஒவ்வொரு அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சிகளுக்கான பயிற்சி இடங்களுக்கு தனித்தனி கலந்தாய்வு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நிரப்பப்பட உள்ளதால், அந்தந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள பயிற்சிப் பிரிவு இடங்களுக்கு தனித்தனியாக ஆன்லைனில் (Online) விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையதளம் மூலம் விண்ணப்பிப்பதில் ஏதேனும் ஐயங்கள் இருப்பின் அருகில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களை அணுகலாம்.

## 11. பயிற்சி பெறுபவரைத் தேர்ந்தெடுக்கும் முறை (Trainees Selection Procedure):

- எட்டாம் வகுப்பு தேறியவர்களுக்கான பயிற்சிப்பிரிவு இடங்களுக்கு பொதுவான தேர்வு நடத்தி தேர்ந்தெடுக்கப்படுவர். தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு தேர்வு பற்றிய விவரம் பின்னர் தெரிவிக்கப்படும். அவ்வாறு நடத்தப்படும் தகுதித் தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.
- பத்தாம் வகுப்பு தேறியவர்களுக்கான பயிற்சிப்பிரிவுகளில் விண்ணப்பித்தவர்கள் பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திற்கும் தனித்தனி தரவரிசை நிர்ணயிக்கப்பட்டு வெளியிடப்படும்.
- ஒவ்வொரு பயிற்சி நிலையத்திற்கும் தரவரிசைப்பட்டியலின் படி விண்ணப்பதாரர்கள் குழுக்களாக பிரிக்கப்பட்டு கலந்தாய்வு முறையில் அழைக்கப்பட்டு விருப்பமான பாடப்பிரிவு தேர்வு செய்யும் முறை கடைப்பிடிக்கப்படும்.
- அழைக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கலந்தாய்வு நிகழ்வில் குறிப்பிடப்படும் தேதி மற்றும் நேரத்தில் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும்.
- விண்ணப்பதாரர் அவருக்கென குறிப்பிட்டுள்ள கலந்தாய்வு தேதி மற்றும் நேரத்தில் கலந்துகொள்ள தவறினால் கலந்தாய்வு நடைபெறும் மற்ற தேதிகளில் கலந்தாய்வுக்கு அனுபதிக்கப்படமாட்டார்கள். இத்தகைய விண்ணப்பதாரர்கள் தங்களது ஆரம்பநிலை தரவரிசைப்படி இடம் தேர்வு செய்ய உரிமை கோர இயலாது.
- விண்ணப்பதாரர்கள் தரவரிசை, இனசுழற்சிமுறை மற்றும் அவர்கள் கலந்தாய்வில் தேர்வு செய்த முன்னுரிமைகள் போன்றவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு தொழிற்பயிற்சி நிலையத்திலும் உள்ள தொழிற்பிரிவு உறுதி செய்யப்பட்டு தற்காலிக சேர்க்கை ஆணை (Provisional Admission Order) வழங்கப்படும்.
- விண்ணப்பதாரர்கள் தங்கள் சேர்க்கை பெற்ற தொழிற்பயிற்சி நிலையத்தில் குறிப்பிட்ட நாளில் பயிற்சியில் சேர வேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட காலகெடுவுக்குள் சேரத்தவறினால் அந்த இடம் காலியிடமாக கருதப்பட்டு அடுத்த கலந்தாய்வின்போது வேறு தகுதியான நபருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.



## 12. தரவரிசையில் சமநிலை மதிப்பெண் (Equal Score in the Ranking):

விண்ணப்பதாரர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரிசை தயார் செய்யப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் தர வரிசையில் சமநிலை மதிப்பெண் பெற்றிருந்தால் கீழ்காணுமாறு தரவரிசை நிர்ணயிக்கப்படும்.

(i) கணித மதிப்பெண் கூடுதலாகப் பெற்றோர் முதலிடம் பெறுவார்.

(ii) கணித பாடத்தில் இருவரும் ஒரே மதிப்பெண் பெற்றிருப்பின், அறிவியல் பாடத்தில் மதிப்பெண் கூடுதலாகப் பெற்றோர் முதலிடம் பெறுவார்.

(iii) கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களில் இருவரும் ஒரே மதிப்பெண் பெற்றிருப்பின், பிறந்த தேதியை கொண்டு அதிக வயதுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## 13. அசல் சான்றிதழ் சமர்பிப்பு (Submission of Original Certificates):

விண்ணப்பதாரர்கள் பயிற்சி நிலையத்தில் சேர தற்காலிக சேர்க்கை ஆணை (Provisional Admission Order) வழங்கப்படும் பட்சத்தில் கீழ்க்கண்ட தங்களுக்கு பொருந்தக்கூடிய அசல் சான்றிதழ்களை அவர்கள் சேர இருக்கும் தொழிற்பயிற்சி நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

(i) பத்தாம் வகுப்புதேறியவர்களுக்கான பயிற்சிப் பிரிவு இடங்களுக்கு பத்தாம் வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற மதிப்பெண் சான்றிதழ் அல்லது எட்டாம் வகுப்பு தேறியவர்களுக்கான பயிற்சிப் பிரிவு இடங்களுக்கு எட்டாம் வகுப்பு தேறியதற்கான பள்ளிச் சான்றிதழ்.

(ii) இறுதியாக கல்வி பயின்ற கல்வி நிலையத்திலிருந்து பெறப்பட்ட மாற்றல் சான்றிதழ் (TC – Transfer Certificate).

(iii) 01.01.2020-க்கு பிறகு பெற்ற குடியிருப்புச் சான்றிதழ் (Residence Certificate).

(iv) 01.01.2020-க்கு பிறகு பெற்ற சாதிச் சான்றிதழ் (Communitiy Certificate) / நடப்பு ஆண்டு புதுப்பிக்கப்பட்ட (PIC – Permanent Integrated Certificate) (ஒதுக்கீடு வேண்டுபவர் மட்டும்).

(v) மாற்றுத் திறனாளிகளுக்கு 40% அல்லது அதற்கு மேலான உடல் ஊனத்திற்கானச் சான்றிதழ்.

(vi) விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகள் /பேரக்குழந்தைகள், விடுதலைப் போராட்ட வீரர்கள் அலுவலகத்திலிருந்து பெற்ற நிரூபன சான்றிதழ். அல்லது விண்ணப்பதாரர்கள் விடுதேலைப் வீரர்களின்

பேரக்குழந்தைகளாக இருப்பின், அதை நிரூபிக்கத் தேவைப்படும் பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்கள்.

(vii) முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகளாக இருப்பின், அதற்கான சான்றிதழ்.

(viii) விளையாட்டு வீரர் கீழ்காணும் சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும்.

- பன்னாட்டு/தேசிய/மாநில/புதுச்சேரி யூனியன் பிரதேச அளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்றதற்கான சான்றிதழ்.

மேலும் கீழ்க்கண்ட நகல் சான்றிதழ்களை சமர்ப்பிக்க வேண்டும்.

(i) புதுச்சேரியில் பதியப்பட்ட ஆதார் அட்டை.

(ii) வங்கிக் கணக்கு எண் மற்றும் விவரம்.

**குறிப்பு:**

- பயிற்சியில் சேரும்போது பயிற்சி பெறுபவர்கள் அவர்களுடைய அசல் சான்றிதழ்களை பயிற்சி நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் அவை பயிற்சி முடியும் வரை திருப்பித் தரப்படமாட்டாது. பயிற்சி பெறுபவர்கள் பயிற்சியில் சேரும்போது தேவையான நகல்களை எடுத்து வைத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- கைபேசி எண் (Mobile Phone) மற்றும் மின் அஞ்சல் முகவரி (E-Mail ID) விவரம் இவை இரண்டும் பயிற்சி காலம் முடியும்வரை மாற்றப்படக் கூடாது.

## 14. சான்றிதழ் சரிபார்ப்பு (Certificate Verification):

மாணவர் சேர்க்கையின் போது சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்களின் உண்மைத்தன்மை சரிபார்க்கப்படும். தவறான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கும் நேர்வில் சம்பந்தப்பட்ட மாணவரின் சேர்க்கை ரத்து செய்யப்படுவதோடு, சம்பந்தப்பட்ட மாணவரின் மீது உரிய குற்றவியல் (Criminal) நடவடிக்கை எடுக்கப்படும்.

## 15. பயிற்சிக் கட்டணம் (Tuition Fee):

- அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சியில் சேருபவர்கள் ₹240 (ரூபாய் இருநூற்று நாற்பது மட்டும்) பயிற்சிக் கட்டணமாக வருடம் ஒருமுறை ஆகஸ்ட் மாதம் 10-ஆம் தேதிக்குள் கட்டவேண்டும்.
- அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சியில் சேரும் அட்டவணை இனத்தவர்கள் (SC) மற்றும் ஊனமுற்றவர்களுக்கு (PC) பயிற்சிக் கட்டணம் இல்லை.
- மேலும், அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சியில் சேருபவர்கள் அனைவரும் ₹50 (ரூபாய் ஐம்பது மட்டும்) காப்புத் தொகையாக (Caution Money Deposit) பயிற்சியில் சேரும்போது செலுத்தவேண்டும்.

- காப்புத் தொகை திரும்ப பெறத்தக்கது. பயிற்சி முடித்த ஒரு மாதக் காலத்திற்குள் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு பயிற்சி பெறுபவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## 16. உதவித் தொகை (Stipend):

அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுபவர்கள் அனைவருக்கும் வருகை நாட்களுக்கு எற்ப மாதம்தோரும் ₹150 வீதம் (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்) உதவித் தொகை வழங்கப்படும்.

## 17. ஊக்கத் தொகை (Merit Scholarship):

அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் சேரும் மாணவர்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும் தனித்தனியாக தரத்தேர்வு (Merit Exam) நடத்தப்படும். தரத்தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் ஒவ்வொரு பயிற்சி பிரிவிலும் உள்ள ஒரு பயிற்சியாளருக்கு மாதம்தோரும் ₹300 வீதம் (ரூபாய் முந்நூறு மட்டும்) ஊக்கத் தொகை (Merit Scholarship) வழங்கப்படும்.

## 18. வேலைவாய்ப்புகள் (Job Opportunities):

தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு தொழிற்சாலைகளிலும், அரசுத்துறை நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சி (Apprenticeship Training) ஏற்பாடு செய்வதற்கென தொழிற்பழகுநர் பிரிவு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த பணியமர்த்தும் அலுவலர்கள் தொழிற்தேர்வில் தேர்ச்சி பெறும் அனைத்து பயிற்சியாளர்களுக்கும் தொழிற்பழகுநர் பயிற்சி அல்லது வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருவர்.

## 19. புதுச்சேரி அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள பயிற்சி பிரிவுகள், பயிற்சி காலம், கல்வித்தகுதி ஆகியவற்றின் விவரங்கள் (Trade details, Training Period and Educational Qualification):

| வ. எண் | தொழிற்பயிற்சியின் பெயர் | பயிற்சி காலம் | குறைந்தபட்ச கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 1 | அழகு கலை பயிற்சி - Basic Cosmetology | 1 ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 2 | சமையல் பயிற்சி - Catering and Hospitality Assistant | 1 ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 3 | கம்ப்யூட்டர் இயக்குபவர் - Computer Operator and Programming Assistant | 1 ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 4 | கம்ப்யூட்டர் பதிவாளர் - Data Entry Operator | 1 ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 5 | கம்ப்யூட்டர் பதிப்பு இயக்குபவர் - Desk Top Publishing Operator | 1 ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 6 | கட்டிட பட வரையாளர் - Draughtsman (Civil) | 2 ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 7 | எலக்ட்ரீஷியன் - Electrician | 2 ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 8 | எலக்ட்ரானிக்ஸ் - Electronics Mechanic | 2 ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 9 | நாகரீக ஆடை தொழில்நுட்பம் – Fashion Design and Technology | 1 ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 10 | ஃபிட்டர் – Fitter | 2 ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 11 | தகவல் தொழில்நுட்பம் - Information and Communication Technology System Maintenance | 2 ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 12 | இயந்திரக்கருவிகள் மெக்கானிக் – Instrument Mechanic | 2 ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 13 | இயந்திர வேலையாள் - Machinist | 2 ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 14 | கட்டிடம் கட்டுபவர் - Mason (Building Construction) | 1 ஆண்டு | 8-ஆம் வகுப்பு |
| 15 | டீசல் மெக்கானிக் - Mechanic (Diesel) | 1 ஆண்டு | 10-ஆம் வகுப்பு |

| வ. எண் | தொழிற்பயிற்சியின் பெயர் | பயிற்சி காலம் | குறைந்தபட்ச கல்வித்தகுதி |
|---|---|---|---|
| 16 | மோட்டார் வாகன மெக்கானிக் - Mechanic (Motor Vehicle) | 2 ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 17 | பிளாஸ்டிக் செயல்முறை இயக்குபவர் – Plastic Processing Operator | 1 ஆண்டு | 10-ஆம் வகுப்பு |
| 18 | ஏசி மெக்கானிக் - Refrigeration and Air-conditioning Technician | 2 ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 19 | தையல் பயிற்சி - Sewing Technology | 1 ஆண்டு | 8-ஆம் வகுப்பு |
| 20 | டர்னர் - Turner | 2 ஆண்டுகள் | 10-ஆம் வகுப்பு |
| 21 | வெல்டர் - Welder | 1 ஆண்டு | 8-ஆம் வகுப்பு |
| 22 | ஒயர்மேன் – Wireman | 2 ஆண்டுகள் | 8-ஆம் வகுப்பு |

## 20. அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அங்குள்ள பயிற்சி பிரிவுகளின் விவரங்கள் (ITI and Trade Details):

**(பெண்கள் புதுச்சேரியில் உள்ள அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் விண்ணப்பிக்கலாம்)**

### அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் (Government ITI):

| வ. எண் | தொழிற்பயிற்சி நிலையம் | பயிற்சி பிரிவுகள் |
|---|---|---|
| 1 | அரசு ஆண்கள் தொழிற்பயிற்சி நிலையம்,<br>மேட்டுப்பாளையம், புதுச்சேரி. | • கம்ப்யூட்டர் இயக்குபவர் - Computer Operator and Programming Assistant<br>• கம்ப்யூட்டர் பதிவாளர் - Data Entry Operator (SCVT)<br>• கட்டிட பட வரையாளர் - Draughtsman (Civil)<br>• எலக்ட்ரீஷியன் - Electrician<br>• எலக்ட்ரானிக்ஸ் - Electronics Mechanic<br>• ஃபிட்டர் - Fitter<br>• கட்டிடம் கட்டுபவர் - Mason (Building Construction)<br>• மோட்டார் வாகன மெக்கானிக் - Mechanic (Motor Vehicle)<br>• பிளாஸ்டிக் செயல்முறை இயக்குபவர் – Plastic Processing Operator<br>• ஏசி மெக்கானிக் - Refrigeration and Air-conditioning Technician<br>• வெல்டர் - Welder<br>• ஒயர்மேன் – Wireman |
| 2 | அரசு பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம், NSC போஸ் ரோடு, வம்பாகீரபாளையம்,, புதுச்சேரி. | • அழகு கலை பயிற்சி - Basic Cosmetology (SCVT)<br>• கம்ப்யூட்டர் இயக்குபவர் - Computer Operator and Programming Assistant<br>• கம்ப்யூட்டர் பதிப்பு இயக்குபவர் -Desk Top Publishing Operator<br>• கட்டிட பட வரையாளர் - Draughtsman (Civil)<br>• எலக்ட்ரானிக்ஸ் - Electronics Mechanic<br>• தகவல் தொழில்நுட்பம் - Information and Communication Technology System Maintenance<br>• தையல் பயிற்சி - Sewing Technology |
| 3 | அரசு தொழிற்பயிற்சி நிலையம், நெட்டப்பாக்கம், புதுச்சேரி. | • கம்ப்யூட்டர் இயக்குபவர் - Computer Operator and Programming Assistant (SCVT)<br>• எலக்ட்ரீஷியன் – Electrician (SCVT)<br>• ஃபிட்டர் – Fitter<br>• தையல் பயிற்சி - Sewing Technology |
| 4 | அரசு தொழிற்பயிற்சி நிலையம், பாகூர், புதுச்சேரி. | • ஃபிட்டர் – Fitter (SCVT)<br>• ஒயர்மேன் – Wireman (SCVT) |

| வ. எண் | தொழிற்பயிற்சி நிலையம் | பயிற்சி பிரிவுகள் |
|---|---|---|
| 5 | அரசு தொழிற்பயிற்சி நிலையம், வில்லியனூர், புதுச்சேரி. | • சமையல் பயிற்சி - Catering and Hospitality Assistant (SCVT)<br>• கட்டிட பட வரையாளர் - Draughtsman (CIVIL) |
| 6 | அரசு ஆண்கள் தொழிற்பயிற்சி நிலையம், திருமலைராயன்பட்டிணம், காரைகால். | • கம்ப்யூட்டர் இயக்குபவர் - Computer Operator and Programming Assistant<br>• எலக்ட்ரீஷியன் - Electrician<br>• ஃபிட்டர் – Fitter<br>• இயந்திரக்கருவிகள் மெக்கானிக் – Instrument Mechanic<br>• இயந்திர வேலையாள் - Machinist<br>• கட்டிடம் கட்டுபவர் - Mason (Building Construction)<br>• டீசல் மெக்கானிக் - Mechanic (Diesel)<br>• மோட்டார் வாகன மெக்கானிக் - Mechanic (Motor Vehicle)<br>• ஏசி மெக்கானிக் - Refrigeration and Air-conditioning Technician<br>• வெல்டர் - Welder<br>• ஒயர்மேன் – Wireman |
| 7 | அரசு பெண்கள் தொழிற்பயிற்சி நிலையம், திருமலைராயன்பட்டிணம், காரைகால். | • அழகு கலை பயிற்சி - Basic Cosmetology (SCVT)<br>• கம்ப்யூட்டர் இயக்குபவர் - Computer Operator and Programming Assistant<br>• கம்ப்யூட்டர் பதிவாளர் - Data Entry Operator (SCVT)<br>• தையல் பயிற்சி - Sewing Technology |
| 8 | ராஜிவ் காந்தி அரசு தொழிற்பயிற்சி நிலையம், மாஹே. | • ஃபிட்டர் - Fitter<br>• ஏசி மெக்கானிக் - Refrigeration and Air-conditioning Technician |
| 9 | NSC போஸ் அரசு தொழிற்பயிற்சி நிலையம், ஏணாம். | • எலக்ட்ரீஷியன் - Electrician<br>• எலக்ட்ரானிக்ஸ் - Electronics Mechanic<br>• நாகரீக ஆடை தொழில்நுட்பம் – Fashion Design and Technology (SCVT) |

**<u>தனியார்</u> தொழிற்பயிற்சி நிலையங்கள் (Private ITI):**

| வ. எண் | தொழிற்பயிற்சி நிலையம் | பயிற்சி பிரிவுகள் |
|---|---|---|
| 1 | இந்திராகாந்தி தனியார் தொழிற்பயிற்சி நிலையம், திருக்கனூர், புதுச்சேரி. | • எலக்ட்ரீஷியன் - Electrician<br>• ஒயர்மேன் – Wireman |
| 2 | ஜெய் அம்மன் தனியார் தொழிற்பயிற்சி நிலையம், மதிகிருஷ்ணாபுரம், புதுச்சேரி. | • எலக்ட்ரீஷியன் - Electrician<br>• ஒயர்மேன் – Wireman |
| 3 | பாண்டிச்சேரி தனியார் தொழிற்பயிற்சி நிலையம், உருளையன்பேட்டை, புதுச்சேரி. | • எலக்ட்ரீஷியன் – Electrician<br>• ஃபிட்டர் – Fitter (SCVT)<br>• ஒயர்மேன் – Wireman |
| 4 | ராஜீவ் மெமோரியல் தனியார் தொழிற்பயிற்சி நிலையம், உருளையன்பேட்டை, புதுச்சேரி. | • எலக்ட்ரீஷியன் – Electrician<br>• ஃபிட்டர் – Fitter (SCVT) |
| 5 | ஸ்ரீ விவேகானந்தா தனியார் தொழிற்பயிற்சி நிலையம், நெல்லித்தோப்பு, புதுச்சேரி. | • எலக்ட்ரீஷியன் - Electrician<br>• ஒயர்மேன் – Wireman |
| 6 | வொர்த் தனியார் தொழிற்பயிற்சி நிலையம், தேங்காய்திட்டு, புதுச்சேரி. | • டர்னர் - Turner |

## 21. அலுவலக முகவரி மற்றும் அலைபேசி விவரம் (Contact Details):

**சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு கீழ்காணும் முகவரியிலும் அலைபேசி மூலமாகவும் தொடர்பு கொள்ளலாம்:**

| | |
|---|---|
| அலுவலக முகவரி | முதன்மை அதிகாரி மற்றும் முதல்வர்,<br>அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையம்,<br>NSC போஸ் ரோடு, வம்பாகீரபாளையம்,<br>புதுச்சேரி – 605001. |
| தொலைபேசி, அலைபேசி மற்றும் WhatsApp எண் | 0413-2341764<br>8300838089 |
| மின்னஞ்சல் | gitiw.pon@nic.in |
| ஆன்லைன் விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான வலைதள முகவரி | https://www.centacpuducherry.in/<br>அல்லது<br>https://labour.py.gov.in/ |